இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 303 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 31 – ஞாயிற்றுக்கிழமை 14 ஜூன் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 303 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 31 - Sunday 14 June 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

### டெல்லி வரை சென்றவர் – மேகதாது பிரச்சினை பற்றி வாய் திறக்காமல் திரும்பியிருக்கிறார் ! மக்களை ஏமாற்றியுள்ள

# விஜய்யின் ‘போலி வெற்றி’ நீண்ட நாள் நிலைக்காது!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் - உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்!

**சென்னை, ஜூன் 14 -**

**கழக இளைஞரணிச் செயலாளரும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் விடுத்த வலைதளப் பதிவில், “பொய்களையும், அவதூறுகளையும் அள்ளி வீசி மக்களை ஏமாற்றி விஜய் பெற்றிருக்கும் போலி வெற்றி நீண்ட நாள் நிலைக்காது! உண்மை நிச்சயம் வெல்லும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

**சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு :-**

தேர்தல் பிரச்சாரத்தின் போது, தமிழ்நாடு ஏதோ படுகுழிக்குள் விழுந்தது போலவும், கடனில் தத்தளிப்பதாகவும் Fake Narratives set செய்த இன்றைய முதலமைச்சர், டெல்லியில் நடந்த நிதி ஆயோக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் சாதனைகள் என்று பெரும் பட்டியலை வாசித்து இருக்கிறார்.

### தமிழ்நாட்டின் முன்னேற்றம் எப்படி சாத்தியமானது ?

இந்தியாவிலேயே 2 ஆவது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. இந்தியாவில் பணிக்குச் செல்லும் பெண்களில் 42 சதவிகித



மகளிர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். பெண் கல்வி - பாதுகாப்பு - சுகாதாரம் போன்றவற்றில் முன்னேற்றம் - மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சி என்று முதலமைச்சர் பேசி இருக்கிறார்.

இவை எல்லாம் அவருடைய ஒரு மாத கால #SofaModel ஆட்சியில் நடந்த சாதனைகளா? அல்லது 5 ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியின் Achievementsஆ? என்பதை முதலமைச்சர் விளக்க வேண்டும்.

### ‘நீட்’ தான் உலகமா?’ எனக் கேட்ட முதல்வர் மாற்றிப் பேசுவது ஏன்?

தேர்தலுக்கு முன்பு ‘நீட் மட்டும் தான் உலகமா?’ என்று கேட்டவர், இப்போது நீட் விலக்கு கேட்டு, அவர் பேசியதற்கு அவரே மறுப்புக் கூறியிருக்கிறார்.

டெல்லி வரை சென்றவர், நிதி ஆயோக் கூட்டத்திலோ, அல்லது கர்நாடகாவில் ஆட்சி செய்யும் அவருடைய புதிய கூட்டணிக்கட்சியிடமோ மேகதாது பிரச்சினை பற்றி வாய் திறக்காமல் - நமக்கெதுக்கு வம்பு என்று Silent ஆக திரும்பி இருக்கிறார்.

### அவதூறுகளை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்த விஜய்!

மொத்தத்தில், நிதி ஆயோக் கூட்டத்தில் நம் கழக அரசின் சாதனைகளின் மீது முழுக்க

### நிதி ஆயோக் கூட்டத்தில் கழக அரசின் சாதனைகள் மீது ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறது ‘ஷோபா மாடல்’ அரசு!

முழுக்க Sticker ஒட்டியிருக்கிறது ‘ஷோபா மாடல்’ அரசு!

பொய்களையும், அவதூறுகளையும் அள்ளி வீசி மக்களை ஏமாற்றி, நீங்கள் பெற்றிருக்கும் போலி வெற்றி நீண்ட நாள் நிலைக்காது CM Sir. உண்மை நிச்சயம் வெல்லும்!

இவ்வாறு அப்பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



லண்டன் சிம்பொனி ஆர்கெஸ்ட்ராவின் 92 உலகத்தரம் வாய்ந்த இசைக்கலைஞர்கள் மற்றும் அவர்களது இசைக் கருவிகளைக் கொண்டு தனது முதல் சிம்பொனி ஆல்பமான “Symphony No.1 – New Beginnings”–ஐ வெற்றிகரமாக இசையமைத்து, பதிவு செய்து முடித்துள்ள, இளம் இசைக்கலைஞர் லிடியன் நாதஸ்வரம் அவர்களை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள தனது இல்லத்தில் சந்தித்து வாழ்த்தினார். அப்போது கழக துணைப் பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் உடனிருந்தார்.

### குறளிசைக் காவியம் படைத்து – இப்போது

## லிடியன் இயற்றியுள்ள சிம்பொனி - சாதனைக்கு வாழ்த்துகள்!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

**சென்னை, ஜூன் 14 -**

**குறளிசைக் காவியம் படைத்து சாதனை புரிந்த லிடியன் இப்போது லண்டனில் சிம்பொனி இயற்றி சாதித்துள்ள திறமைமிகு இளைஞனுக்கு வாழ்த்துகள், பாராட்டுகள் என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

லண்டன் சிம்பொனி ஆர்கெஸ்ட்ராவின் 92 உலகத்தரம் வாய்ந்த இசைக்கலைஞர்கள் மற்றும் அவர்களது இசைக் கருவிகளைக் கொண்டு தனது முதல் சிம்பொனி ஆல்பமான “Symphony No.1 - New Beginnings”–ஐ வெற்றிகரமாக இசையமைத்து, பதிவு செய்து முடித்துள்ள, இளம் இசைக்கலைஞர் லிடியன் நாதஸ்வரம் அவர்களை, கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள தனது இல்லத்தில் சந்தித்து வாழ்த்தினார். அப்போது கழக துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் உடனிருந்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

“#குறளிசைக்காவியம் படைத்துச் சாதனை படைத்த நமது @lydian_official, இப்போது #Symphony இயற்றியுள்ளார்!

வாழ்த்துகள் இந்த இளைஞனுக்கு - சாதனைகள் இன்னும் பல படைக்கவிருக்கும் திறமை மிகு கலைஞனுக்கு!”

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### ஆட்சிக்கு வந்தபிறகு அறிவித்தபடி

## இதுவரை எத்தனை டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டன?

### தகவல் தெரிவிக்காமல் த.வெ.க. அரசு கைவிரிப்பு!

*சென்னை, ஜூன் 14 -*

*த.வெ.க அரசு ஆட்சிக்கு வந்த பிறகு பள்ளி, கல்லூரி அருகில் உள்ள எத்தனை டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டுள்ளன? என்ற ஆர்.டி.ஐ. கேள்விக்கு தகவல் இல்லை என த.வெ.க. அரசு கைவிரித்துள்ளது.*

*தமிழ்நாடு முழுவதும் பள்ளி, கல்லூரி மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் உள்ள 717 டாஸ்மாக் கடைகளை மூட த.வெ.க. அரசு அண்மையில் உத்தரவிட்டிருந்தது.*

*இதுதொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட விண்ணப்பத்தில், த.வெ.க. அரசு ஆட்சிக்கு வந்த பிறகு பள்ளி, கல்லூரிகள் அருகில் உள்ள எத்தனை டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டுள்ளன என தமிழ்நாடு மாநில வாணிப கழகத்திடம் விவரங்கள் கேட்கப்பட்டிருந்தது.*

*மேலும், கடைகளில் பணிபுரிந்து வந்த பணியாளர்களுக்கு அரசு வழங்கியுள்ள மாற்றுப் பணி விவரம் குறித்தும் ஆர்.டி.ஐ மூலம் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.*

*ஆனால், கோப்புகள் நிலுவையில் உள்ளன என்றும் தகவல் வழங்க இயலாது என்றும் தமிழ்நாடு மாநில வாணிப கழகம் தெரிவித்துள்ளது.*

## அரசு நிகழ்ச்சிகளில் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து !

### த.வெ.க. அரசு பதிலளிக்க சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவு!

*சென்னை, ஜூன் 14-*

*அரசு நிகழ்ச்சிகள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் துவங்குவதை உறுதி செய்யக்கோரிய வழக்கில் தமிழ்நாடு அரசு பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*‘திராவிட மாடல்’ ஆட்சியில் அனைத்து அரசு நிகழ்ச்சிகளும் தமிழ்த்தாய் வாழ்த்து பாடலுடன் தான் தொடங்கி நடைபெற்றது. ஆனால், த.வெ.க. அரசு பதவியேற்பு நிகழ்ச்சியிலேயே தமிழ்த்தாய் வாழ்த்து அவமதிக்கப்பட்டது.*

*தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. கடும் கண்டனங்களும் வலுத்தன. ஆனாலும், அடுத்தடுத்த அரசு நிகழ்ச்சிகளிலும் வந்தே மாதரம் பாடல்தான் முதலில் பாடப்பட்டது.*

*இந்த நிலையில், அரசு நிகழ்ச்சிகள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் துவங்குவதை உறுதி செய்யக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.*

*சென்னையைச் சேர்ந்த அனன்யா ராதாகிருஷ்ணன் தாக்கல் செய்த மனுவில், தமிழ்நாட்டில் அரசு நிகழ்ச்சிகள், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடி துவங்கப்படுவதும், தேசிய கீதம் இசைத்து நிறைவு செய்வதும் பல ஆண்டுகளாக மரபாக பின்பற்றப்பட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.*

*இந்த நடைமுறையை நீர்த்துப் போகச் செய்யும் வகையில், அரசு நிகழ்ச்சிகளில் வந்தே மாதரமும், தேசிய கீதமும் பாடப்பட்ட பிறகே, தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுவதாக கூறியுள்ளார்.*

*வந்தே மாதரம் பாடலை முதலில் பாட வலியுறுத்தி ஒன்றிய அரசு அனுப்பிய சுற்றறிக்கையை ரத்து செய்ய கோரப்பட்டுள்ளது. மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், இது தொடர்பாக ஒன்றிய, மாநில அரசுகள் 8 வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டுள்ளது.*